# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

Under Section 173 BNSS ~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(கு.வி.மு.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8069052

1. District மாவட்டம் : The Nilgiris PS: காவல்நிலையம் V & AC Year: ஆண்டு 2025 FIR No.: மு.த.அ. எண் 2/2025 Date: நாள் 21.02.2025

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Act, 1988 as amended by the Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : Act, 2018

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 19.12.2024 Date to : நாள் வரை 20.02.2025

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 02.25 hrs Time to : நேரம் வரை 20.45 hrs.

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 21.02.2025 Time : நேரம் 15.15 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 21.02.2025 Time : நேரம் 15.15 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil Typed complaint.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் District Elementary Educational Office about 5 kms. West.

Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி —

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் T. John Shibu Manick (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Thamburaj

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 32/2025 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —

(f) Occupation : தொழில் Secondary Grade Teacher (g) Address : முகவரி Archedin Estate, Nonsuch Post, Coonoor the Nilgiris.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Santhosh, District Elementary Educational Officer Udhagamandalam, The Nilgiris.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

(Signature) 21/2/2025 (Signature) 21-02-2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 21.02.2025
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 17.10 hrs.

Name: பெயர் G. SHANMUGAVADIVU
Rank: நிலை ...................No. எண் ..........
Inspector of Police,
V & AC, The Nilgiris

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நீலகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.2/2025/AC/NI, u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-

இன்று 21.02.2025-ம் தேதி வெள்ளிகிழமை 15.15 மணிக்கு காவல் ஆய்வாளர், G.சண்முக வடிவு ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது நீலகிரி மாவட்டம், குன்னூர், நான்சச் அஞ்சல், ஆர்செடின் எஸ்டேட் என்ற முகவரியில் வசிக்கும் திரு.தம்புராஜ் என்பவரின் மகன் திரு.த.ஜான் ஷிபு மாணிக் என்பவர் அலுவலகம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகார் மனுவை என்னிடம் கொடுத்தார். நான் அந்த புகார் மனுவை பெற்று படித்து பார்த்தேன். புகார் சம்மந்தமாக புகார்தாரரிடம் விசாரித்தும், எதிரி நடத்தை குறித்து ரகசிய விசாரணை மேற்கொண்டதில், மாவட்டக்கல்வி அலுவலர் (தொடக்ககல்வி) அலுவலகத்தில் மாவட்டக்கல்வி அலுவலராக (தொடக்ககல்வி) பணிபுரியும் திரு.சந்தோஷ் என்பவர் புகார்தாரருக்கு மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற WP.No.10521/2024 மற்றும் WMP Nos.11531 & 11532/2024, நாள்:27.06.2024-ன்படி பணியில் சேர்ந்த நாள் முதல் பணி நியமனத்திற்கு ஒப்புதல் அளிக்கவும், நிலுவைத்தொகை ஊதியம் முழுவதையும் வழங்குவதற்கு ஆணை பிறப்பிக்கவும் புகார்தாரரிடம் லஞ்சமாக ரூ.5,00,000/- கேட்டிருப்பதும், அதில் ரூ.2,00,000/-ஐ முதல் தவணையாக கொடுக்கவும், மீதம் ரூ.3,00,000/-ஐ பணி நியமன ஒப்புதல் மற்றும் நிலுவைத்தொகை ஊதியம் கிடைக்க ஆணை வழங்கியவுடன் கொடுக்குமாறு கூறியுள்ளது தெரியவந்தது. மேற்படி புகாரின் அடிப்படையில் எதிரியின் நற்பெயர் குறித்து ரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில், எதிரியின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும் மேலும் புகார்தாரருக்கும், எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு முன்விரோதம் ஏதுமில்லை என்றும், அவரது புகார் நம்பகத்தன்மை கொண்டது என்றும் தெரியவந்தது. மேலும்

புகாரின் உண்மைதன்மையையும், நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையிலிருந்து எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 21.02.2025-ம் தேதி 16.00 மணிக்கு நீலகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.2/2025/AC/NI-ல் ஊழல் தடுப்பு சட்ட பிரிவு 7-ன் படி, மேற்படி எதிரி திரு.சந்தோஷ், மாவட்டக்கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி), கூடுதல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம் என்பவர் மீது வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் த.ஜான் ஷிபு மாணிக், வயது 32/2024, த/பெ தம்புராஜ், ஆர்செடின் எஸ்டேட், நான்சச் அஞ்சல், குன்னூர், நீலகிரி மாவட்டம். பெறுநர் மதிப்பிற்குரிய காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். ஐயா, நான் குன்னூர், பில்லூர்மட்டம் எஸ்டேட் குடியிருப்பில் குடியிருந்து வருகிறேன். எனது குடும்பத்தினர் திருப்பூர் மாவட்டம் பெருமாநல்லூரில் குடியிருந்து வருகின்றனர். நான் நீலகிரி மாவட்டம், குன்னூர் மண்டலம், பார்க் சைடு, CSI துவக்கப்பள்ளியில் 17.01.2018-ம் தேதி முதல் தற்காலிக இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் பணிபுரிந்து வரும் CSI துவக்கப்பள்ளி அரசு நிதி உதவி பெறும் பள்ளியாகும். CSI பள்ளியின் தாளாளர் என்னை நிரந்தர பணி நியமனம் செய்ய ஒப்புதல் கோரி 01.07.2019-ம் தேதி குன்னூர் வட்டாரக் கல்வி அலுவலர் அவர்களுக்கு கடிதம் அனுப்பினார். எனது இடைநிலை ஆசிரியர் நியமனத்திற்கு துறை ஒப்புதல் அளிக்க மறுத்ததால், நான் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.15853/2021 மற்றும் W.MP.No.16737/2021-ன்படி வழக்கு தொடர்ந்தேன். அந்த வழக்கினை விசாரித்த நீதிமன்றம் என்னை 17.01.2018-ம் தேதி முதல் நிரந்தரமாக பணியில் நியமித்து ஒப்புதல் வழங்குமாறு 28.06.2022-ம் தேதி ஆணை பிறப்பித்தது. ஆனால் நீலகிரி மாவட்டக் கல்வி அலுவலர் மாண்பமை உச்ச நீதிமன்றம் SLP 21983/2022, நாள்:26.08.2022-ன்படி வழங்கிய தீர்ப்பாணையில் சுட்டிக்காட்டப்பட்ட சென்னை உயர்நீதிமன்றம் கிளையின்

வழக்கு W.P (MD) 471 to 475/2018, நாள்:20.03.2018-ன் தீர்ப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரங்களின் அடிப்படையில் 17.01.2018 முதல் பள்ளி நிர்வாகத்தால் இடைநிலை ஆசிரியராக நியமிக்கப்பட்ட எனது நியமனத்தினை ஏற்பளித்திட இயலாது எனக்கூறி நீலகிரி மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) செயல்முறைகள் ந.க.எண்.264/ஆ2/2022, நாள்: 19.04.2023-ன்படி நிராகரித்து ஆணை பிறப்பித்தார். மேற்படி ஆணையை எதிர்த்து நான் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் WP.No.10521/2024 மற்றும் WMP Nos.11531 & 11532/2024-ன்படி வழக்கு தாக்கல் செய்தேன். வழக்கினை விசாரணை செய்த நீதிமன்றம், எதிர் மனுதாரர்கள் எனது பணி நியமனத்தை 17.01.2018-ம் தேதி முதல் அங்கீகரித்தும், எனக்கு வழங்க வேண்டிய அனைத்து நிலுவைத்தொகைகளை நீதிமன்ற ஆணை கிடைக்கப்பெற்ற 12 வாரங்களுக்குள் வழங்கும்படி 27.06.2024-ம் தேதி ஆணை பிறப்பித்தது. ஆறு மாதங்களாகியும் மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலகத்திலிருந்து எனக்கு எந்த ஒப்புதலும் வழங்காததால், நான் மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி) திரு.சந்தோஷ் அவர்களை சந்திக்க 18.12.2024-ம் தேதி மாலை சுமார் 06.00 மணிக்கு நீலகிரி மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) அலுவலகத்திற்கு சென்றேன். மாவட்ட கல்வி அலுவலர் அலுவலகத்தில் இல்லாததால், மாலை சுமார் 06.55 மணிக்கு என்னுடைய செல்போன் எண்.96593 40311-லிருந்து DEEO அவர்களின் செல்போன் எண்.96261 18572-க்கு தொடர்புகொண்டு பேசினேன். அப்போது அவர் 19.12.2024-ம் தேதி அலுவலகம் வரச்சொன்னார். அதன்படி நான் 19.12.2024-ம் தேதி மதியம் சுமார் 01.00 மணிக்கு DEEO அவர்கள சந்திக்க சென்றபோது, அவர் மதிய உணவிற்கு சென்றுவிட்டதால் நான் என்னுடைய செல்போன் எண். 96593 40311-லிருந்து DEEO செல்போன் எண். 96261 18572-க்கு தொடர்புகொண்டு பேசினேன். அப்போது அவர் மதியம் 02.00 மணிக்கு வருவதாக தெரிவித்ததால் அவர் வருகைக்காக நான் அங்கேயே காத்திருந்தேன். அவர் அலுவலகம் வந்தபின்னர் மதியம் சுமார் 02.25 மணிக்கு DEEO திரு.சந்தோஷ் அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து எனது பணி நியமன ஒப்புதல் மற்றும் நிலுவை ஊதியம் தொடர்பாக

கேட்டேன். அதற்கு அவர் எனது பணி நியமன ஒப்புதல் தொடர்பாக 2018-ம் முதல் சிஎஸ்ஐ பள்ளிகளில் உபரியாக உள்ள ஆசிரியர்களின் விவரங்கள் கேட்டு சிஎஸ்ஐ பேராயம், கோவை திருமண்டலம் கீழ் இயங்கும் கோயம்புத்தூர், திருப்பூர் மாவட்ட தொடக்க கல்வி அலுவலர்களுக்கு கடிதம் அனுப்பி விவரங்கள் பெறவேண்டியுள்ளது. அதனால் எனது பணி நியமனத்திற்கு ஒப்புதல் அளிக்க தாமதமாகிறது என்று தெரிவித்தார். நான் அவரிடம் 17.01.2018-ம் தேதி பணியில் சேர்ந்த நாள் முதல் இதுநாள் வரையில் எனக்கு சம்பளம் வழங்கப்படவில்லை, எனது வயதான பெற்றோர்களை பார்த்துக்கொள்ள சிரமமாக இருப்பதால், வார விடுமுறை நாட்களில் பெயிண்ட் அடிக்கும் வேலை மற்றும் கூலி வேலைக்கு செல்வதாக கூறினேன். அதற்கு அவர் எனது பணி நியமனத்திற்கு ஒப்புதல் வழங்கவும், எனக்கு கிடைக்க வேண்டிய நிலுவைத் தொகைக்கான ஆணை வழங்கவும் தனக்கு தனியாக ரூ.5,00,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என்று கேட்டார். அதற்கு நான் அவ்வளவு பணம் என்னிடம் இல்லை என்றும், கடன் வாங்கி குடும்பத்தை நடத்தி வருகிறேன் என்று கூறினேன். அதற்கு அவர் 2018-ம் ஆண்டு முதல் பணி நியமன ஆணை வழங்கினால் குறைந்தது ரூ.15,00,000/-மாவது நிலுவைத்தொகை கிடைக்கும். தனக்கு ரூ.5,00,000/- தருவதற்கு என்ன கஷ்டம் என்று கூறினார். பின்னர் நான் அங்கிருந்து சென்றுவிட்டேன். அதன்பின்னர் 04.01.2025-ம் தேதி DEEO அவருடைய செல்போன் எண்ணிலிருந்து வாட்ஸ்அப் மூலம் மாலை சுமார் 04.30 மணிக்கு எனக்கு போன் செய்தார். நான் டூவீலரை நிறுத்தி அழைப்பை ஏற்பதற்குள் கால் கட்டாகிவிட்டது. பின்னர் நான் வாட்ஸ்அப் காலில் அவரை தொடர்பு கொண்டு பேசினேன். அப்போது DEEO சில Clarification இருப்பதாகவும், 06.01.2025-ம் தேதி திங்கட்கிழமை காலை தன்னை அலுவலகத்தில் வந்து சந்திக்கும்படி கூறினார். அதன்படி 06.01.2025-ம் தேதி DEEO திரு.G.சந்தோஷ் அவர்களை அவரது அலுவலகத்தில் மாலை சுமார் 06.00 மணிக்கு சந்தித்தேன். அவர் என்னிடம் 2018-ம் முதல் சிஎஸ்ஐ பள்ளிகளில் உபரியாக உள்ள ஆசிரியர்களின் விவரங்கள் கேட்டு கோயம்புத்தூர், திருப்பூர் DEEO அலுவலகங்களுக்கு கடிதம் அனுப்பியிருப்பதாக தெரிவித்தார். அப்போது தான் கேட்ட பணம் ரூ.5,00,000/-

ரெடியாகிவிட்டதா என்று கேட்டார். அதற்கு நான் அவ்வளவு பணம் என்னால் ஏற்பாடு செய்ய இயலவில்லை என்று தெரிவித்தேன். அதற்கு அவர் தான் கேட்ட பணம் ரூ.5,00,000/-ஐ கொடுத்தால்தான் பிப்ரவரி இறுதிக்குள் பணி நியமன ஒப்புதல் வழங்கி நிலுவை தொகை கிடைக்க ஏற்பாடு செய்ய முடியும் என்று தெரிவித்தார். மேலும் அவர் தான் அழைத்தால் மட்டும் அலுவலகத்திற்கு வந்தால் போதும் என்றும், தன்னிடம் பேசும்போது வாட்ஸ்அப் காலில் மட்டும் பேசுமாறும், இது சம்மந்தமாக வேறு யாரிடமும் கலந்தாலோசிக்க கூடாது என்றும் அறிவுறுத்தினார். ஒருமாதம் ஆகியும் எந்த தகவலும் இல்லாததால் 03.02.2025-ம் தேதி காலை சுமார் 11.30 மணிக்கு நான் DEEO அவர்களை வாட்ஸ்அப் கால் மூலம் தொடர்பு கொண்டேன். அப்போது அவர் என்னுடைய ஒரிஜினல் ஆவணங்கள் அனைத்தையும் கொடுத்து விட்டீர்களா என்று கேட்டு, 05.02.2025-ம் தேதி மாலை அலுவலகத்திற்கு வருமாறு தெரிவித்தார். நான் 05.02.2025-ம் தேதி பள்ளியில் எனது வேலையை முடித்துவிட்டு இரவு சுமார் 07.30 மணிக்கு நீலகிரி மாவட்ட தொடக்க கல்வி அலுவலகத்தில் DEEO அவர்களை சந்தித்தேன். அப்போது திரு.சந்தோஷ் சார் அவர்கள் என்னுடைய பைலைதான் பார்த்துக்கொண்டிருப்பதாகவும், பணம் ரூ.5,00,000/-ஐ ரெடியாகி விட்டதா என்று கேட்டார். அதற்கு நான் அவரிடம் என்னால் அவ்வளவு பணம் ரெடி பண்ண முடியவில்லை என்று தெரிவித்தேன். அதற்கு DEEO முதல் தவணையாக ரூ.3,00,000/- கொடுக்குமாறும், பணி நியமன ஒப்புதல் கிடைத்தவுடன் மீதி பணம் ரூ.2,00,000/-ஐ ஒரு வாரத்திற்குள் கொடுத்துவிடுமாறும் கூறினார். மேலும், தான் சொன்னவுடன் வரும் சனிக்கிழமை 08.02.2025-ம் தேதி சென்னையில் வந்து பணத்தை கொடுக்க வேண்டியிருக்கும் என்று கூறினார். இதற்கிடையில் நான் பள்ளிக்கல்வி துறையின்மீது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவினை நடைமுறைபடுத்தவில்லையென 29.01.2025-ம் தேதி நீதிமன்ற அவமதிப்பு வழக்கு CONT P-14401/2025 தொடர்ந்தேன். மேற்படி வழக்கு 07.02.2025-ம் தேதி CONT P-417/2025-ன்படி ஏற்றுக்கொள்ளப்பட்டது. 17.02.2025-ம் தேதி மதியம் சுமார் 02.00 மணிக்கு DEEO திரு.G.சந்தோஷ் அவர்கள் எனது வாட்ஸ்அப்பிற்கு "As per the honorable court direction your orders will be

complied without any delay. If anyone misguide you in our department for this order by using my name wrongly kindly give a complaint and necessary action will be taken. Pls stick on with your court direction" என தகவல் அனுப்பினார். அதை பார்த்தவுடன் நான் DEEO அவர்களை வாட்ஸ்அப் கால் மூலம் மதியம் சுமார் 02.20 மணிக்கு தொடர்பு கொண்டு பேசினேன். அப்போது அவர் 18.02.2025-ம் தேதி மதியம் தன்னை அலுவலகத்தில் வந்து சந்திக்குமாறு கூறினார். அதன்படி நான் 18.02.2025-ம் தேதி DEEO அவர்களை மதியம் சுமார் 02.30 மணிக்கு அவரது அலுவலகத்தில் சந்தித்தேன். அப்போது அவர், தான் பணி நியமன ஒப்புதல் வழங்குவது தொடர்பாக லஞ்சமாக பணம் கேட்டது குறித்து யாரிடமாவது தெரிவித்தீர்களா என்று கேட்டார். அதற்கு நான் யாரிடமும் தெரிவிக்கவில்லை என்று சொன்னேன். என்னுடைய பணி நியமனத்திற்கு ஒப்புதல் வழங்குதல் மற்றும் நிலுவைத்தொகை கிடைக்க உத்தரவு போட வேண்டியது தன்னுடைய பொறுப்பு என்றும், வேறு யாராவது தன்னுடைய பெயரை சொல்லி பணம் கேட்டால் கொடுக்க வேண்டாம் என்றும் தான் சொல்லுமாறு நடந்து கொள்ளுமாறு அறிவுறுத்தினார். மேலும் அவர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் தாங்கள் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்துள்ளதால், தனக்கு வேறு எந்த பிரச்சனையும் வந்துவிடக்கூடாது என்றும், அதனால் தான் சொல்வதுபோல் எழுதி கொடுங்கள் என்று கேட்டார். எனக்கு எழுதி கொடுக்க விருப்பம் இல்லை என்று சொன்னேன். அதற்கு DEEO ஏற்கனவே 2022-ம் ஆண்டு நீங்கள் ஹைகோர்ட்டில் வழக்கு தொடர்ந்து உத்தரவை பெற்றபோது, அப்போதிருந்த DEEO சில காரணங்களைச் சொல்லி பணி நியமன ஒப்புதல் வழங்காமல் நிராகரித்ததுபோல், தானும் சில காரணங்களை கூறி நிராகரித்து விடுவேன். எனவே தான் சொல்வதுபோல் எழுதி கொடுக்குமாறு கூறினார். பின்னர் DEEO திரு.சந்தோஷ் அவர்கள் சொல்லச் சொல்ல நான், "பணி நியமனத்திற்கான அலுவல் பணிகள் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் அலுவலகத்திலிருந்து அதிகாரிகள் என்னிடம் நியமனம் தொடர்பாக பணம் கேட்பதாக புகார் எழுந்துள்ளதை அறிந்து வருந்துகிறேன். இந்நிலையில் உதகை மாவட்ட கல்வி அலுவலகத்திலோ வட்டார கல்வி அலுவலகத்திலோ

எந்தவொரு அதிகாரியும் என்னிடம் ஒப்புதல் அளிப்பது எந்தவொரு பிரதிபலனையோ, பணமோ கேட்கவில்லை. அனைத்து பணிகளும் முறையான அலுவல் படியே நடக்கிறது என உறுதியளிக்கிறேன்" என்று 18.02.2025-ம் தேதியிட்டு எழுதிக்கொடுத்தேன். எனது பணி நியமன ஒப்புதல் மற்றும் நிலுவைத்தொகை கிடைக்க DEEO அவர்கள்தான் ஆணை பிறப்பிக்கவேண்டும் என்பதால், வேறு வழியில்லாமல் அவர் சொன்னபடி எழுதி கொடுத்தேன். பின்னர் அவர் என்னிடம் பணி நியமன ஒப்புதல் வழங்குவதற்கு முதல் தவணையாக தான் கேட்ட பணம் ரூ.3,00,000/- என்ன ஆச்சு என்று கேட்டார். அவ்வளவு பணத்தை என்னால் ரெடி செய்யமுடியவில்லை என்று தெரிவித்தேன். அதற்கு அவர் எப்பொழுது கேட்டாலும் பணம் இல்லை இல்லையென்று சொல்கிறீர்கள். வாங்குற தொகைக்கு ரூ.3,00,000/- கூட ஏற்பாடு செய்ய முடியாதா என்றும், கடைசியாக ரூ.1,00,000/-ஐ குறைத்துக்கொள்கிறேன் என்றும், தான் 26.02.2025-ம் தேதிக்குள் ஆர்டர் போட்டுவிடுவதாகவும், அதனால் 22.02.2025-ம் தேதிக்குள் பணம் ரூ.2,00,000/-ஐ ரெடி செய்து கொடுக்கும்படியும், அவ்வாறு தான் கேட்ட பணத்தை கொடுக்கவில்லையென்றால் 2018-ம் ஆண்டிலிருந்து கிடைக்கவேண்டிய நிலுவைத்தொகையினை 2024-ம் ஆண்டு முதல் கிடைக்குமாறு ஆணை வழங்கிவிடுவேன் என்று கண்டிப்புடன் கூறினார். பின்னர் 19.02.2025-ம் தேதி மாலை சுமார் 05.00 மணிக்கு DEEO அவர்களின் வாட்ஸ் அப்பிலிருந்து மிஸ்டு கால் வந்தது. நான் அவரை மீண்டும் வாட்ஸ் அப் காலில் தொடர்பு கொண்டபோது, அவர் என்னுடைய பணி நியமன ஒப்புதல் தொடர்பான வேலைகள் ஏறக்குறைய முடிந்த நிலையில் இருப்பதாகவும், தான் முதல் தவணையாக கேட்ட ரூ.2,00,000/- கொடுக்காததால், தங்களுக்கு எந்த வருடத்திலிருந்து பணி ஆணை வழங்குவதென்பதை மட்டும் குறிப்பிடாமல் நிறுத்தி வைத்திருப்பதாக தெரிவித்து, பணம் ரெடியானவுடன் தன்னை வாட்ஸ் அப்பில் தொடர்பு கொள்ளுமாறு கூறி தொடர்பை துண்டித்தார். DEEO அவர்கள் கூறியபடி நான் 20.02.2025-ம் தேதி இரவு சுமார் 08.40 மணிக்கு DEEO அவர்களை வாட்ஸ்அப் காலில் தொடர்பு கொண்டேன். அவர் எடுக்கவில்லை. பின்னர் சிறிது நேரத்தில் DEEO அவர்கள் என்னை

வாட்ஸ்அப் காலில் தொடர்பு கொண்டு சொல்லுங்க என்று சொன்னார். அதற்கு நான் சார் கூப்பிட சொன்னீர்கள் அதனால் நான் கூப்பிட்டேன் என்று சொன்னே. அதற்கு DEEO அவர்கள் பணம் ரெடி ஆகிவிட்டதா என்றும், 21.02.2025-ம் தேதி தான் ஊட்டியில்தான் இருப்பேன் இரவு 07.00 மணிக்குமேல் பணத்துடன் ஊட்டிக்கு வந்து தன்னை தொடர்பு கொள்ளுமாறு சொன்னார். எனக்கு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற W.P.No.10521/2024-ன்படி வழங்கிய உத்தரவை பின்பற்றி பணி நியமன ஒப்புதல் அளித்து, நிலுவை தொகையினை வழங்க ஆணை பிறப்பிக்க நீலகிரி மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி) திரு.சந்தோஷ் அவர்கள் முதல் தவணையாக கேட்கும் லஞ்சப்பணம் ரூ.2,00,000/-ஐ கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே நீலகிரி மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி) திரு.சந்தோஷ் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். தேதி 21.02.2025 இப்படிக்கு ஒப்பம் (XXXX) 21.02.2025 (T.ஜான் ஷிபு மாலிக்) Submitted: Received the above complaint on 21.02.2025 at 15.15 hrs and after conducting a discreet enquiry, registered a case in V & AC, The Nilgiris Cr.No.2/2025 u/s 7 of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 on 21.02.2025 at 16.00 hrs. Sd (XXXX) 21.02.2025 Inspr.of Police, V&AC, The Nilgiris. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் தலைமை நீதித்துறை நடுவர், தலைமை நீதித்துறைநடுவர் நீதிமன்றம், உதகமண்டலம் அவர்களுக்கு அனுப்பிவைத்தும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன்.

21-02-2025

(G.சண்முக வடிவு)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நீலகிரி.